# தெய்வீக சுகமளித்தல்

# 3

சகோ.
பிரன்ஹாம்
அவர்களின்
மேற்கோள்கள்

(படங்களுடன்)

***Bro. Branham:***

~~~~~

உங்கள் விசுவாசம் என்பது தேவன் உங்களில் காண்பது, உங்கள் கிரியைகள் என்பது ஜனங்கள் உங்களில் காண்பது.

~~~~~

செய்தி: விசுவாசத்தை வெளிப்படுத்துவது கிரியைகள்

# நீங்கள் விசுவாசிப்பீர்களானால்



நீங்கள் விசுவாசிப்பீர்களானால்,
நீங்கள் சுகமடையாமலிருப்பது கூடாத
காரியம். இதை திரும்ப கூறுகிறேன்.
நீங்கள் விசுவாசிப்பீர்களானால்,
நீங்கள் சுகமடையாமலிருப்பது
முற்றிலும் கூடாத காரியம்.

சகோ. பிரான்ஹாம்

இப்போது,
உங்களுடைய
நோய்களுக்காக
இயேசு கிறிஸ்து
மரித்தார் என்கிற
ஊக்குவித்தலை
நீங்கள் பெற்றுக்
கொள்ளும் போது,
அந்த மணி நேரமே
உங்களுடைய
சுகமாகுதல் வந்து
விட்டது

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

இப்போது, உங்களுடைய நோய்களுக்காக இயேசு கிறிஸ்து மரித்தார் என்கிற ஊக்குவித்தலை நீங்கள் பெற்றுக் கொள்ளும் போது, அந்த மணி நேரமே உங்களுடைய சுகமாகுதல் வந்து விட்டது. அது சரியே. நீங்கள் இயேசு உங்களுடைய பாவங்களுக்காக மரித்தார் என்றும் மற்றும் அதை ஏற்றுக் கொண்டீர்கள் என்பதையும் பரலோகத்திலிருந்து பெற்றுக் கொள்ளும்போது, அதற்குப் பிறகு உங்களுக்கு எந்த ஜெபமும் தேவையில்லை. நீங்கள் ஏற்கனவே ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். அது சரி செய்யப்படுகிறது.

இப்போது, வார்த்தையைப் பிரசங்கிக்கக் கூடும், வார்த்தையை விவரித்துக் கூற முடியும். ஆனால், நீங்கள் வார்த்தையை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஓ, அல்லேலூயா. சகோதரனே, அப்படித்தான் அதன் அக்கினி பற்ற வைக்கப்படுகிறது. அதை – அந்த வெளிப்படுத்தலை நீங்கள் ஏற்றுக் கொள்ளும்போது, பார்க்க முடியாத அந்த உலகத்திலிருந்து ஏதோவொன்று நழுவிப் போய் விடுகிறது. எங்கிருந்தோ காணக் கூடாத வாய்க்கால் வழியாக உருண்டோடி உங்கள் ஆத்துமாவுக்குள் வந்து, "இப்போது, நான் அதைக் காண்கிறேன்" என்று கூறுகிறது. உங்கள் கண்கள் பளிச்சிடுகின்றன;

தொங்கிக் கொண்டிருந்த உங்கள் உதடுகள், உயர நிமிர்த்தப்பட்டு, சிரிக்கிறது. உங்களுடைய சரீரத்திலுள்ள ஒவ்வொரு தசையும் மகிழ்ந்து களிகூரும். ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது. ஏதோ ஒன்று... அப்போது நீங்கள் ஜெப வரிசையில் நிற்க வேண்டிய அவசியம் வராது. அங்கேயே அதைப் பெற்றுக் கொண்டீர்கள்.

*சுகமாக்கப்படுவதற்கு தேவனால் அருளப்பட்ட வழி, 54-0719 A, பத்தி எண் E-29*

ஒருமுறை உங்களுடைய சுகத்தை ஏற்றுக் கொள்வீர்களானால், வேறு ஒரு ஜெபவரிசையில் நீங்கள் ஒருபோதும் போக வேண்டியதில்லை.

என்றென்றுமாக அதைச் சரிப்படுத்தத்தக்கதாக அனுமதிக்கிறீர்கள். பாருங்கள்?

*எதிர்பார்த்தல், 51-0930, பத்தி எண் E-64*

★★★★★

# அதை சாத்தானிடமே தள்ளி விடுகிறேன்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

செய்தி: விளங்காத சத்தம், டிசம்பர் 18, 1960, பத்தி எண் 1-3

**ஒருவார காலமாக, சில நிமிடங்களுக்கு ஒரு முறை என் ஜலதோஷத்தை பிசாசுக்குத் திரும்ப அளித்துக் கொண்டிருந்தேன். உங்களுக்குத் தெரியுமா, ஒவ்வொரு முறை அவன் அதை எனக்குத் தந்தபோது, அதை அவனுக்கே திரும்ப அளித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறோம். அவன்தான் அதை வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் தீர்மானித்து விட்டேன். பாருங்கள், ஒவ்வொரு முறையும் அவன் அதை எனக்குத் தரும்போது, அதை அவனிடமே தள்ளி விடுகிறேன். அவன் அதை மறுபடியும் கொடுப்பதில் மிகவும் சமர்த்தன் என்று உங்களுக்குத் தெரியும். அதை எப்படி செய்வதென்று அவன் நன்கு அறிந்திருக்கிறான். அன்றிரவு நான்**

**கூறினது போல், முடிவில் நாம் அவனுடைய பொறுமையை போக்கி விடுவோம்.**

ஒருமுறை ஒருவனுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டபோது, அவன், "நான் சுகமடையவில்லை என்று பிசாசு என்னிடம் கூறினான். நான் பார்த்தபோது, வியாதியின் அறிகுறிகள் அத்தனையும் துவக்கத்தில் இருந்தது போலவே இருந்தன. நான், '**சாத்தானே, நான் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை என்பது உண்மைதான். ஆனால் என்ன தெரியுமா? அவை என்னை விட்டுச் செல்லும் வரைக்கும், நான் தேவனுடைய மகிமைக்கென்று மும்முரமாக சாட்சி கூறப்போகிறேன். எனவே நீ இருந்து கொண்டு நான் கூறுவதைக் கேட்க விரும்பினால், அப்படியே செய்**'" என்றானாம்.

**அதுவே உண்மையான விசுவாசம். தேவனுடைய மகிமைக்கென்று சாட்சி கூறுங்கள்!** ஏனெனில் "**விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்,**

**காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.”** பாருங்கள்? **நீங்கள் விசுவாசத்தை கண்களால் காண முடியாது. அதை நம்புகிறீர்கள்** – விசுவாசத்தை.

அவரை அணுகுவதற்கு அவர் வகுத்த வழியில் வந்திருப்பீர்களேயானால், பயபக்தியோடு நீங்கள் வந்திருப்பீர்களேயானால், ஏதோவொன்றைப் பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

சில ஜனங்கள் இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டு சுகமடைந்தார்கள். மற்றவர்கள் அவருடைய கன்னத்தில் அடித்தார்கள், தடிகளை வைத்து அவருடைய தலையில் அடித்தார்கள், அவருடைய முகத்தில் துப்பினார்கள், ஒரு வல்லமையையும் ஒரு போதும் அவர்கள் உணரவில்லை. அவர்கள் அவரை அணுகிய முறை அவ்விதமாக இருந்தது. எத்தகைய மனப்பான்மையோடு நீங்கள் உள்ளே வந்தீர்களோ அதைப் பொறுத்தது. உதவியைப் பெறுவதற்காக, அதை விசுவாசித்தவர்களாய் நீங்கள் வந்திருப்பீர்களேயானால், அந்த சரியான நபராகிய இயேசு கிறிஸ்துவிடம் வருகிறீர்கள் என்ற நம்பிக்கையைப் பெறுகிறீர்கள். அவரை அணுகுவதற்கு

அவர் வகுத்த வழியில் வந்திருப்பீர்களேயானால், பயபக்தியோடு நீங்கள் வந்திருப்பீர்களேயானால், ஏதோவொன்றைப் பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள். "நல்லது, நான் போய் அவரைத் தொட்டு, அது எனக்கு உதவி செய்கிறதா என்று பார்ப்பேன்" என்ற (எண்ணத்துடன்) நீங்கள் வந்தால், அது எந்த நன்மையும் பயக்காது. பாருங்கள்? அது உங்களுடைய – அது நீங்கள் தேவனுடைய தெய்வீக நபரை அணுகுவதாகும். அதைத் தான் அது செய்கிறது.

வெண்கல சர்ப்பத்தைப் போல. ஏன், சர்ப்பம் தனக்குள் எந்த வல்லமையையும் பெற்றிருக்கவில்லை; அது ஒரு வெண்கலத் துண்டு மட்டுமே. அதை அவர்கள் எகிப்திலிருந்து

கொண்டு வந்திருந்தார்கள். அந்தக் கம்பம் தனக்குள் எந்த வல்லமையையும் கொண்டிருக்கவில்லை. ஒரு சிறு துளி கூட கிடையாது. ஆனால் தேவன் என்ன செய்யக் கூறினாரோ, அதைச் செய்து கீழ்ப்படிவதாகும். வல்லமையை எது கொண்டு வந்தது. எது வல்லமையைக் கொண்டு வந்தது. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிதலே அந்த வல்லமையைக் கொண்டு வந்தது. இந்த இரவு வேளையிலும் அதே காரியம் தான்.

*குருடனான பர்த்திமேயு, 54-0402, பத்தி எண் E-9*

★★★★★

# நீங்கள் முதலாவது அதை அறிக்கை செய்து, உங்களுடைய அறிக்கையின் பேரில் செயல்படும் மட்டுமாக, பிரதான ஆசாரியராகிய இயேசுவால் உங்களுக்காக ஒரு காரியத்தையும் செய்ய முடியாது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

## (GOD'S COVENANT WITH ABRAHAM)

சனிக்கிழமை மாலை, ஏப்ரல் 28, 1956
சம்பூரண ஜீவ மையம், சார்லெட்,
வட கரோலினா, அமெரிக்கா
56-0428

78. இப்பொழுது, உங்களுடைய அறிகுறிகளை நோக்கிப் பார்க்க வேண்டாம். உங்களுக்குத் தெரியும், ஒரு மனிதன் ஒரு சமயம் கொண்டிருந்த கொஞ்சம் அறிகுறிகளை நான் உங்களிடம் கூறட்டும்: என்னுடைய ஜீவியத்தில் எப்பொழுதும் கண்டதிலேயே மோசமான கேஸ். அது யோனா என்று பெயருடைய ஒரு மனிதனாவான். தேவன் அவனை

நினிவேக்கு அனுப்பினார், அவன் ஒருவிதமாக தைரியத்தை இழந்தவனாயிருந்தான், ஏனென்றால் ஊழியக்காரச் சங்கம் அங்கே அவனுக்கு விரோதமாயிருந்தது. ஆகையால், அவன் தர்ஸீசுக்குப் போனான், அங்கே மிகவும் இலகுவாயிருந்தது, அநேக பரிசுத்தவான்கள், உங்களுக்குத் தெரியும். ஆனால் அவனுடைய பாதையில், பிரச்சனை எழும்பினது. செய்ய வேண்டாம் என்று தேவன் உங்களிடம் கூறின ஏதோவொன்றை நீங்கள் செய்யும்போது, நீங்கள் வழக்கமாக அந்த விதமாகத் தான் பெற்றுக் கொள்வீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

79. கடல் பொங்கினது, அலைகள் கப்பலுக்குள் வந்தன, இறுதியாக அவன்தான் அதற்குக் காரணம் என்று அவன் அறிக்கை பண்ணினான். அவர்கள் அவனுடைய காலையும் கைகளையும் கட்டி கடலில் எறிந்தனர். இப்பொழுது கவனியுங்கள், தேவன் ஒரு பெரிய மீனை அங்கே வைத்திருந்தார், அது வந்து யோனாவை விழுங்கினது. அதற்குப் பிறகு, ஒரு மீன் சாப்பிடும் போது, அது (கடலின்) அடியில் சென்று, நீந்துவதற்கான தன்னுடைய துடுப்புகளை அடியில் இளைப்பாறப்பண்ணும். உங்களுடைய கோல்டு பிஷ்களுக்கு உணவு கொடுத்து விட்டு என்ன நடக்கிறது என்று கவனித்துப் பாருங்கள்.

80. எனவே, அந்த மீன் தன்னுடைய இரைக்காக தண்ணீருக்குள் தேடித்திரிந்து கொண்டிருந்தது. தேவன் அங்கே அதை வழிநடத்தினார். இங்கே ஒரு பின்வாங்கிப் போன பிரசங்கி இருந்தான். அவன் வெளியே எறியப்பட்டிருந்தான், அது இந்த பிரசங்கியாரை விழுங்கினது. இங்கே - அவன் அங்கே அந்த பெரிய மீனின் வயிற்றில் பின்வாங்கிப் போனவனாகவும், அவனுடைய கழுத்தைச் சுற்றிலும் கடற்பாசி சுற்றியிருக்கிறவனாகவும், ஒரு பெரிய வயிறு நிறைய உள்ள வாந்தியிலே படுத்தவனாகவும், ஒரு புயல்வீசும் கடலில், ஒருவேளை அநேக அடிகள் ஆழத்தில் இருந்தான், இந்தப் பெரிய மீன் யோனாவைப் புசித்த பிறகு, கீழே

சென்று, அங்கே கீழே இருந்தது. அவன் இவ்விதமாக நோக்கிப் பார்த்தால், இது மீனின் வயிறாக இருந்தது; அவன் அவ்விதமாக நோக்கிப் பார்த்தால், அதுவும் மீனின் வயிறாக இருந்தது; அவனால் காண முடிந்த எல்லா இடங்களும் மீனின் வயிறாகவே இருந்தது. அவன் பின்வாங்கிப் போனவனாய், அவனுடைய காலும் கைகளும் அவனுக்குப் பின்பாக கட்டப்பட்டவனாய், ஒரு புயல்வீசும் கடலில் இருந்தான். அதைக் காட்டிலும் மோசமான விதத்தில் யாரும் இங்கில்லை.

81. ஆனால் அவன் என்ன சொன்னான் என்று உங்களுக்குத் தெரியுமா? அவன், “அவைகள்

பொய்யான மாயைகள். நான் என்னுடைய நிலைமையில் இந்த பெரிய மீனின் வயிற்றை நோக்கிப்பார்க்க மாட்டேன்" என்றான். ஆனால் அவன், "கர்த்தாவே, நான் இன்னும் ஒருவிசை உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன். சாலமோன் ஆலயத்தை பிரதிஷ்டை பண்ணின போது, அவன், "கர்த்தாவே, உமது ஜனங்கள் எங்காவது தொல்லையில் அகப்பட்டு, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தை நோக்கிப் பார்த்து ஜெபிப்பார்களானால், பரலோகத்திலிருந்து அதை கேட்பீராக" என்று ஜெபித்தான்"

82. அவன் தாவீதுடைய குமாரனாகிய சாலமோனுடைய ஜெபத்தில் நம்பிக்கைக்

கொண்டிருந்தான். தேவன் ஆக்ஸிஜன் கொள்கலத்தை அல்லது ஏதோவொன்றை அங்கே கீழே அனுப்பி, அவனை மூன்று நாட்கள் உயிரோடு பாதுகாத்தார். யோனா அந்த சூழ்நிலையிலும், முடிவில் பின்வாங்கிப் போனவனாய் மரித்திருந்த சாலமோனுடைய ஜெபத்தில் விசுவாசம் கொண்டிருக்கக் கூடுமானால், இன்றிரவு தேவனுடைய வலதுபாரிசத்தில் தம்முடைய சொந்த இரத்தம் தோய்ந்த வஸ்திரங்களோடு உட்கார்ந்து, நம்முடைய அறிக்கையின் பேரில் பரிந்து பேசிக் கொண்டிருக்கும் தாவீதுடைய உண்மையான குமாரனிடத்தில் நாம் எவ்வளவு அதிகமாக விசுவாசம் கொண்டிருக்க வேண்டும்? ஆமென்!

83. ஒவ்வொரு இரவும் சரியாக நம்மைச் சுற்றிலும் ஜனங்கள் சுகமடைவதை காண்கிறோம். ஓ, அவைகள் பொய்யான மாயைகள், அது என்னவாக இருந்தாலும், அது ஒரு பொய்யான மாயை தான். "நான் இதை இதற்கு மேலும் கொண்டிருக்க மறுப்பு தெரிவிக்கிறேன், தேவனே, நான் அந்த பரிசுத்த ஆலயத்தை நோக்கிப் பார்க்கப் போகிறேன்".

84. நீங்கள் முதலாவது அதை அறிக்கை செய்து, உங்களுடைய அறிக்கையின் பேரில் செயல்படும் மட்டுமாக, பிரதான ஆசாரியராகிய இயேசுவால் உங்களுக்காக ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. "நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியனாக அவர் இருக்கிறார்"

என்று எபிரெயர் 3ம் அதிகாரம் கூறுகிறது. அது வெளிப்படையாக தெரிவிப்பது (profess) என்ற வார்த்தையாகும், ஆனால் வெளிப்படையாகத் தெரிவி (profess) என்ற வார்த்தையும், அறிக்கை செய் (confess) என்ற வார்த்தையும் ஒரே வார்த்தை தான். "நாம் அறிக்கை பண்ணுகிற பிரதான ஆசாரியன்." நீங்கள் முதலில் அதை ஏற்றுக் கொண்டு, அவர் அதை செய்து விட்டார் என்று அறிக்கை செய்யும் வரை அவரால் எதையும் செய்ய முடியாது. அது சரியே.

# ~ 11 ~

(இந்தப் புத்தகம் சரிபார்ப்பில் உள்ளது)

# முழு பாதாளமும் அவனுக்கு எதிராக திரும்பியது

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

சகோதரனே, புலனால் உணரக்கூடிய தனிச்சிறப்பு வாய்ந்த அந்தப் பக்கம் சார்ந்து கொண்டு, தொடங்குங்கள். கவனியுங்கள். ஒவ்வொரு ஏமாற்றுகிறவனும், அவன் நரகத்திற்கு செல்லும்போது, வேட்டை நாயைப் போல எப்படியாக குரைத்து திரிவான். இரத்தம் குடிக்க எப்படியாக வாஞ்சித்தவனாயிருப்பான். அது சரியா? அது உண்மை.

பெந்தெகோஸ்தே நாளன்று, பேதுரு ஒரு பிரசங்கம் செய்தான், மூவாயிரம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டனர். இதை உங்களுக்குக் கூறுகிறேன். பிசாசு

அவனுடைய படுக்கையை விட்டு நகரக் கூட முடியவில்லை. அது சரிதான். “ஓ, நல்லது, அவர்கள் தனியே இருக்கட்டும்.” பாருங்கள்?

அடுத்த நாள் அலங்கார வாசல் என்றழைக்கப்படும் வாசல் வழியாக கடந்து சென்றான். தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதலாய் முடமாயிருந்த ஒரு மனிதனை சுகமாக்கினான். முழு பாதாளமும் அவனுக்கு எதிராக திரும்பியது (அது சரியே), அவரைச் சிறைச்சாலையில் போட்டார்கள். இரவெல்லாம் அங்கேயே வைத்திருந்தார்கள். ஆம், ஐயா. சிறைச்சாலையில் உள் அறையில் வைத்தார்கள். ஏனென்றால் அது அத்தனை தனிச்சிறப்பு வாய்ந்த

ஒன்றாக இருந்தது. பிசாசு, "இப்போது தொடங்கியிருக்கிற இந்த தெய்வீக சுகமளித்தலை அனுமதிக்க மாட்டேன். அவர்கள் அதைச் செய்வார்களானால், உண்மையிலேயே அவர்கள் என்னுடைய அதிகாரத்திற்குக் கீழே இருக்கிற என்னுடைய உடைமைகளை என்னை விட்டு அகற்றி விடுவார்கள்" என்று கூறினான். அது சரியே. "ஏனென்றால், சற்று நேரத்திற்கு சிறிய இறையியல் மூலமாக அவர்களை முட்டாள்களாக்கப் போகிறேன். ஆனால், வெளிப்படும் அந்த உண்மையான காரியத்தை முட்டாளாக்க முடியாது, அது செய்யப்பட்டதை ஜனங்கள் கண்டார்கள்; மற்றக் குழுவினரும் இந்தக் காட்சியைக் காணாதபடி நான்

இப்போதே இதை நிறுத்திப் போடுகிறேன்” என்றான்.

அதன்பிறகு, அவன் ஒருபோதும் அதை நிறுத்தவில்லை. இப்போதும் அவனால் அதைத் தடை செய்ய முடியாது. அது சரியே. தேவனுடைய சுவிசேஷம் அசைந்து, அசைந்து கொண்டேயிருக்கும்.

*பரிசுத்த ஆவியின் நடபடிகள், 54-1219 E, பத்தி எண் 63-66*

★★★★★

# அதை விசுவாசியுங்கள்! என்ன சம்பவித்தாலும் காரியமில்லை, எப்படியும் அதை விசுவாசியுங்கள்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

## (GOD'S COVENANT WITH ABRAHAM)

சனிக்கிழமை மாலை, ஏப்ரல் 28, 1956
சம்பூரண ஜீவ மையம், சார்லெட்,
வட கரோலினா, அமெரிக்கா
56-0428

60. அதை விசுவாசியுங்கள்! என்ன சம்பவித்தாலும் காரியமில்லை, எப்படியும் அதை விசுவாசியுங்கள். கிறிஸ்தவர்கள் தாங்கள் எதைக் காண்கிறார்கள் என்பதில் நோக்கிப் பார்க்க மாட்டார்கள் என்பதைக் கவனியுங்கள்; கிறிஸ்தவர்கள் தாங்கள் காணாததையே நோக்கிப்

பார்க்கிறார்கள். நீங்கள் காண்கிற காரியங்களைக் காட்டிலும் நீங்கள் காணாத காரியங்கள் தான் அதிக உண்மையாக உள்ளன. அந்த ஒலிப்பெருக்கியைக் கவனியுங்கள். அது அழிந்து விடும். ஒருபோதும் அழிந்து போகாத விசுவாசத்தை நான் காண்கிறேன், பாருங்கள். நான் அன்பு - அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, நற்குணம், சாந்தம், தயவு, பொறுமை ஆகியவைகளை நான் காண்கிறேன். விசுவாசியினுடைய ஒவ்வொரு கேடயமும் இயற்கைக்கு மேம்பட்டவைகளாக உள்ளன. கிறிஸ்தவத்தின் அதிகார எல்லையைச் சார்ந்த ஒவ்வொன்றும்

இயற்கைக்கு மேம்பட்டவைகள் மூலமாக கிரியை செய்கின்றன.

ஒருசமயம் நாத்திகர் ஒருவர் என்னிடம், "விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கக் கூடாத எதுவும் உண்மையானதல்ல" என்று கூறினார்.

நான், "விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கக்கூடிய எதுவும் உண்மையானதல்ல" என்றேன். அது அதற்கு மாறாக உள்ளது.

அவர், "உம்மிடம் ஏதோ தவறுள்ளது" என்று கூறினார்.

நான், "ஆம், நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன், அது தான் தவறு" என்றேன்.

அவர், “ஓ பாரும்” என்றார். அவர் சொன்னார்...

நான், “இப்பொழுது, நீர் என்னிடம் விற்க முயற்சித்துக் கொண்டிருக்கும் தொலைக்காட்சிப் பெட்டியை நீர் இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறீர்” என்றேன்.

61. அவர் சொன்னார்... நான், “அது அற்புதமானது” என்றேன். நான், “அங்கே இயற்கைக்கு மேம்பட்ட ஏதோவொன்றுள்ளது என்பதை நீர் பாரும். அந்தப் படமானது அந்தத் திரையை அடையும் முன்பதாகவே நம்மினூடாக வந்து கொண்டிருக்கிறது” என்றேன்.

அவர், "ஓ, ஆமாம்" என்று கூறிவிட்டு, ஆனால், "அது எளிதானது. எங்களுக்கு ஒரு அனுப்பும் நிலையமும் (sending station) ஒரு பெறும் இடமும் (receiving station) உண்டு" என்றார்.

62. நான், "அவைகள் எங்களுக்கும் உண்டு" என்றேன். ஆமென்! நாமும் ஒரு அனுப்பும் நிலையத்தையும் (sending station) ஒரு பெறும் இடத்தையும் (receiving station) பெற்றுள்ளோம். நிச்சயமாக. சகல சிக்னல் தடங்கல்களையும் (static), அவிசுவாசத்தையும் வெளியே தள்ளி விட்டு, என்ன சம்பவிக்கிறது என்று கவனியுங்கள்.

அந்த காட்சியானது தெளிவாக இருப்பதைக் கவனியுங்கள், அதன்பிறகு நீங்கள், "ஓ, ஆமாம், கர்த்தாவே, நான் இப்பொழுது காண்கிறேன்" என்று கூறுவீர்கள்.

63. அதுதான் வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது; நீங்கள் எவ்வளவு சிக்னல் தடங்கல்களை உள்ளே அனுமதிக்கிறீர்கள் என்பதை அது பொறுத்தது, நீங்கள் பாருங்கள். எந்த சிக்னல் தடங்கல்களையும் அனுமதிக்க வேண்டாம்... அப்படியே சரியாக தேவனோடும், வார்த்தையோடும் தரித்திருங்கள், தேவன் ஒவ்வொரு தடவையும் ஐயத்துக்கிடமின்றி

**சரியாக அதனூடாகக் அதைக் கொண்டு வருவார்.**

(இந்தப் புத்தகம் சரிபார்ப்பில் உள்ளது)






வில்லியம் மரியன் பிரன்ஹாம்

இப்போது, கூறுங்கள், உங்களில் சிலர் பெண்களாயிருக்கிறீர்கள், நாளைக்கு துரித முகவர்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து, "எப்படியிருக்கிறீர்கள், நீங்கள் செல்வி ஜாண் டோ தானே?" என்பார்கள்.

"ஆம்" என்பீர்கள்.

"நல்லது, ஏதோ காரியத்திற்காக இங்கே உங்களிடம் வந்திருக்கிறேன்" என்பார்கள்.

அதை நீங்கள் கவனிக்கிறீர்கள், அது ஒரு பெரிய பெட்டி, அதில் நிறைய கொடிய விஷப்பாம்புகள் இருக்கின்றன. நல்லது, எத்தகைய ஒரு வெகுமதி. அங்கே அவைகளில் உங்கள் பெயர் கட்டப்பட்டிருக்கிறது.

"இவைகள் எல்லாம் உங்களுடையது."

அவைகள் உங்களுடையதா? ஒருவகையில் அவைகள் உங்களுடையதுதான். மற்றொரு வகையில் அது உங்களுடையவைகளல்ல. இப்போது, "நான் அவைகளை விரும்பவில்லை" என்று கூறலாம்.

"நல்லது, அவைகள் உங்களுடையது தான்; உங்களுடைய பெயர் அதில் இருக்கின்றது."

நல்லது, ஒருவகையில் அவைகள் உங்களுடையது தான், ஆனாலும் அதில் கையெழுத்துப் போடுமட்டும் அது உங்களுடையது அல்ல. அதில் நீங்கள் கையெழுத்து

போடவில்லையெனில், அதை அவர் திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்களுடைய எல்லாவிதமான அறிகுறிகளையும் பார்க்கலாம். “அது இங்கே இருக்கிறது; உங்களுடைய புற்றுநோய் இங்கேயிருக்கிறது; இங்கே உங்களுடைய இருதயக் கோளாறு உள்ளது; இங்கே உங்களுடைய முடமான நிலைமை இருக்கிறது” என்று பிசாசு கூறுகிறான்.

பிசாசு கொண்டு வருகிற எதிலும் கையெழுத்துப் போடாமல் மறுத்து விடுங்கள். அவ்வாறு செய்யும்போது அவன் அதைத் திரும்ப எடுத்துக் கொள்ளவே செய்ய வேண்டும். “அதை நான் பெற்றுக் கொள்ள மறுக்கிறேன். இல்லை, ஐயா.

அதை நான் பெற்றுக் கொள்ள மாட்டேன்" என்று கூறுங்கள். கர்த்தருடைய நாமத்தில் அவன் அதைத் திரும்ப எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் அதை விசுவாசித்து, அதை அறிக்கை செய்தால், "நான் இயேசு கிறிஸ்துவை என்னுடைய சுகமளிப்பவராக ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறுங்கள். அப்போது, அங்கே துன்பம் இருக்காது, அல்லது வியாதி உங்களுக்குள் தங்கியிருக்க முடியாது. சரியாக அதிலேயே தரித்திருங்கள்.

ஆனால் முதல் முறையாக நீங்கள் பலவீனம் அடையும் போது, "நல்லது, ஆம், இப்போதும் அது என்னில் இருக்கிறது" என்று

கூறுகிறீர்கள். அதன்பிறகு, நீங்கள் எங்கேயிருக்கிறீர்களோ அங்கேயே அதை இறக்கி விட்டு விடுங்கள். அதற்காக அதில் கையொப்பம் இடுங்கள், பின்பு அதைத் திரும்ப எடுத்துப் போடுங்கள். "ஆம், திருவாளர் பிசாசு அவர்களே, அதைத் திரும்ப பெற்றுக் கொள்வேன்" என்று கூறுங்கள். ஓ, சகோதரனே.

நீங்கள் அங்கேயே தரித்திருங்கள். உங்கள் சரீரத்தில் சுவாசம் இருக்குமட்டும் அங்கேயே தரித்திருங்கள். "அதைப் பெற்றுக் கொள்ள மறுக்கிறேன், அதைப் பெற்றுக் கொள்ள மறுக்கிறேன்" என்று கூறுங்கள். எப்படி உணருகிறீர்கள்? "அதிசயம், அல்லேலூயா." அதுதான்

அது. அது சரியா? அவைகளிலிருந்து நீங்கள் என்ன செய்தீர்கள் என்று பிசாசுக்குக் காட்டுங்கள்; தேவனுடைய ஆவியினால் நீங்கள் மறுபடியும் பிறந்தீர்கள், ஆகவே அவனுடைய உருவங்களுக்கு முன்பாக பணிய வேண்டிய அவசியம் இல்லை. அங்கேயே தரித்திருந்து, "உன்னுடைய காரியம் எதுவும் எனக்கு வேண்டாம்" என்று கூறுங்கள்.

"ஏன், இங்கே உங்களுடைய பெயர் இருக்கிறது, மருத்துவர் சொன்னார்..."

"அவர் என்ன கூறினார் என்பதைப் பற்றி அக்கறையில்லை. தேவன் என்ன கூறினார் என்பதை

நான் அறிந்திருக்கிறேன். அத்தோடு இங்கிருந்து ஓடி விடு.”

அது சரியே, அவனை நடத்த வேண்டிய விதம் அதுதான்; அவன் கையிலேயே அதைக் கொடுத்து விடுங்கள்.

*இரண்டாவது அற்புதம், 51-0729 E, பத்தி எண் E-35 முதல் E-36 வரை*

**ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். (யாக். 4:7)**

★★★★★

# நீங்கள் அதை விசுவாசிப்பதாகவும், சுகமடைந்து விட்டதாகவும் சாட்சி கூறி முன்னேறிச் செல்லுங்கள்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

நீங்கள் அதை விசுவாசிப்பதாகவும், சுகமடைந்து விட்டதாகவும் சாட்சி கூறி முன்னேறிச் செல்லுங்கள். அப்போது நீங்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். நல்லது, அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் இரட்சிக்கப்பட்டதாக சாட்சி கூறும் போது, அது நீதிக்கு என்று கிரியை செய்கிறது. சுகமடைந்து விட்டதாக சாட்சி கொடுங்கள். அது சுகத்திற்கான கிரியையை நடப்பிக்கும். தேவன் அதை அருளிச் செய்வார்.

*எதிர்பார்ப்பு, 50-0405, பத்தி எண் E-62*

ஆனால், இப்போது, நீங்கள் செய்யவேண்டுவதெல்லாம், அதை விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்ள

வேண்டும், அப்போது நீங்கள் அதைப் பெற்றுக் கொள்வீர்கள். பாருங்கள், எதை பொருள் கொண்டு பேசுகிறேன்? இப்போது, இதைக் காட்டிலும் மேலான காரியம் ஒன்றும் செய்வதற்கில்லை. ஏனென்றால், உங்கள் சுகத்திற்கான கிரயம் ஏற்கனவே செலுத்தப்பட்டாயிற்று. இந்தப் பிற்பகல் வேளையிலேயே உங்களால் அதைப் பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் விசுவாசிக்கும்போது, இப்போதே, இந்த நிமிஷத்திலேயே அதைப் பெற்றுக் கொள்ள முடியும். உங்களு டைய விசுவாசம் தேவனுடைய தேவையை சந்திக்கும்போது, உங்களுடைய வியாதிக்காக கிறிஸ்து மரித்தார் என்று விசுவா சிக்க வேண்டும். உங்களுடைய பாவங்களுக்காக அவர்

மரித்த போது, (அவர் உங்களுடைய பாவங்களுக்காக கல்வாரியில் மரித்தார்), அந்த அடிப்படையில் அதை ஏற்றுக் கொள்ளும்போது, அந்த கணமே, தேவனுடைய பார்வையில் நீங்கள் சுகத்தைப் பெற்றுக் கொண்டீர்கள். பாருங்கள்? அதன்பிறகு அதை விசுவா சித்தவர்களாய் தொடர்ந்து சாட்சி கூறிக்கொண்டேயிருங்கள்.

நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டியதில்லை... நாம்... நீங்கள் காணாத காரியங்களைக் குறித்து சாட்சி கொடுங்கள். விசுவாசமானது நம்பப்படுகிறவைகளில் உறுதியும், காணப்படா தவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. நாம் காணக்

கூடாதவை களை நோக்கிப் பார்க்கிறோம்.

*நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா?, **50-0716,** பத்தி எண் E-13*

★★★★★

உங்கள் வாழ்க்கையில்
உள்ள பாவத்தை அறிக்கை
செய்யுமட்டும் சாத்தான்
அங்கேயே தரித்திருப்பான்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

சுகமாகுதல் என்பது ஏற்கனவே உங்களுடையதாயிருக்கிறது. அப்படியானால், அவ்வியாதி தொடரும் என்றால், அது பாவத்தின் காரணமாக இருக்கும்: உங்களுடைய வாழ்க்கையில் ஏதோ சரியல்லாத காரியத்தைச் செய்து கொண்டிருக்கலாம், அல்லது வேறு ஏதோ – சில பிசாசுகள் உங்களைத் தங்களுடைய ஆதிக்கத்தில் வைத்துள்ளன, அது உங்களை விசுவாசிக்க அனுமதிக்காது. இப்போது, உங்களுக்குத் தெரியுமா, அது அவ்வாறு இல்லையென்றால், “விசுவாசிக்கிறவர்களுக்கு சகலமும் கூடும்” என்று இயேசு சொன்ன காரியமும் தவறாயிருக்கும். அது சரியா? அப்படியானால், அது

உங்களுக்குள்ளேயே இருக்கிறது; அது தேவனிடத்தில் இல்லை.

*தேவனை விசுவாசித்தல், 52-0224, பத்தி எண் 225*

இப்போது, உங்கள் மீது ஏதோ தொங்கிக் கொண்டிருக்கிறது, பாவம், நீங்கள் அதை அறிக்கை செய்வதில்லை, அந்த மனிதனை நீங்கள் அபிஷேகிக்க கூடும், அவர்களுக்காக ஜெபிக்கக்கூடும், நீங்கள் விரும்புவதையெல்லாம் செய்யக்கூடும், அது... உங்கள் வாழ்க்கையில் உள்ள பாவத்தை அறிக்கை செய்யுமட்டும் சாத்தான் அங்கேயே தரித்திருப்பான். அல்லது சில நேரங்களில், நீங்கள் செய்யாத ஏதோவொன்று, ஏதோவொன்றை செய்யத் தவறியது. ஏதாவது தவறு என்றால் தேவன் அதை வெளிப்படுத்துகிறார்.

அப்போது அதை நீங்கள் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்; உங்களுடைய சுகம் பூரணப்பட்டு விட்டது.

*இப்போது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?, 53-1106, பத்தி எண் E-9*

★★★★★

# சுகமாக்குதல் என்பது தேவனிடத்தில் மட்டுமே இருக்கிறது என்பதை நான் விசுவாசிக்கிறேன்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

என்னுடைய நண்பர்களே, இதைச் சொல்வதற்கு நான் வாஞ்சிக்கிறேன். நான் சுகமளிப்பவன் அல்ல. நான் ஜனங்களை சுகமாக்க முடியாது. எந்த மனிதனோ, எந்த மருத்துவரோ அல்லது மருத்துவமனையோ அல்லது மருந்துகளோ, ஜனங்களை சுகப்படுத்தும் என்பதை நான் விசுவாசிப்பதில்லை. சுகமாக்குதல் என்பது தேவனிடத்தில் மட்டுமே இருக்கிறது என்பதை நான் விசுவாசிக்கிறேன்.

இப்போது, ஒரு மருத்துவர் ஒரு அடைப்பை நீக்கிப் போடலாம், முறிந்த எலும்பைப் பொருத்தலாம், ஒரு பல்லைப் பிடுங்கிப் போடலாம், ஒரு கட்டியை எடுத்துப் போடலாம். ஆனால், அது சுகப்படுத்துவதில்லை. அது சற்றே அந்தத் தடையை நீக்கிப் போடுவதாகும்.

தேவனே சுகமாக்குகிறார். சுகமாக்குதல் என்பது சிருஷ்டிப்பாகும். அது சிருஷ்டித்து மறுபடியும் கட்டுகிறது. ஒரு மருந்தும் உங்கள் சரீரத்தைத் திரும்பவும் கட்டாது. தேவன் ஒருவர் மாத்திரமே திரும்பக் கட்டமுடியும். அது சரியா? தேவன்; அவரே சுகமாக்குகிறவர்.

*அதன்பிறகு இயேசு வந்தார், 57-0302, பத்தி எண் E-33*

இன்று இரவில் அமெரிக்காவில் நமக்கு என்ன தேவையாயிருக்கிறது, இன்று இரவில் இங்கே இந்தக் கூடாரத்தில் நமக்கு என்ன தேவைப்படுகிறது என்று நான் உங்களிடம் கூறுகிறேன். மருத்துவராகிய இயேசு வரட்டும், வந்து நம்முடைய விசுவாசத்தின் செயல்பாட்டில் அறுவை சிகிச்சை செய்யட்டும். மருத்துவர்,

நீங்கள் சிறிய குடல் வால்வைப் பெற்றிருக்கிறீர்கள் என்று கூறுவார், "அது எல்லாமும் விஷம் நிறைந்திருக்கிறது, அது வெளியே வர வேண்டும். நீங்கள் அதைப் பெற்றிருக்கிறீர்கள், இதைப் பெற்றிருக்கிறீர்கள் அல்லது மற்றவைகள் யாவும் சரியல்ல; அது வெளியே அகற்றப்பட வேண்டும்." நல்லது, அவர் அதை அகற்றி விடுகிறார், ஆகவே மற்ற உங்களுடைய உறுப்புகள் யாவும் சரியாய் இயங்க வேண்டும். இன்றிரவில் நம்முடைய விசுவாசத்திற்கு என்ன பாதகம் ஏறபட்டது. தேவன் அவருடைய செயல்படுத்தும் வார்த்தையை எடுப்பதற்கு அனுமதிக்கப் பயப்படுகிறோம். அவருடைய கத்தியை எடுத்து, அது இருபுறமும் கருக்குள்ள

பட்டயத்தைக் காட்டிலும் கூர்மையானது, அவர் நம்மில் அறுவை சிகிட்சை செய்யட்டும். அவர் வந்து நமக்கிருக்கிற சிறிய, ஆணும் பெண்ணுமாய் பாடிக் கொண்டே ஆடுதல், மற்றும் சுற்றியிருக்கிற மோசம் போக்கும் காரியங்கள் தவறானவை என்று நம்மிடம் சொல்லட்டும், நம்மை விட்டு அகற்றிப் போடட்டும். ஒவ்வொரு நிழல்களையும் அகற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம்; தேவனுடைய நித்திய வாக்குத்தத்தத்தை நோக்கிப் படகைச் செலுத்துவோம். ஓ, நாம் அதைச் செய்வோமானால், இயேசு நம்முடைய விசுவாசத்தின் மீது கிரியை செய்து, எல்லா சந்தேகங்களையும், எல்லா பயத்தையும், எல்லா கவலைகளையும், எல்லா பாவங்களையும், அதற்குள் இருக்கிற எல்லாவற்றையும்

அகற்றிப் போடுவார். மேலும், நம்முடைய விசுவாசம் அதில் தெளிவாக செயல்படும்போது, நாம் ஒரு புது சிருஷ்டியாக வெளி வருவோம். அப்போது நாம் வித்தியாசமானவர்களாகக் காணப்படுவோம். ஒரு அறுவை சிகிட்சை நமக்குத் தேவைப்படுகிறது.

*விசுவாசமே நமது ஜெயம், 58-1004, பத்தி எண் E-35*

★★★★★

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*

**சகோ. பினேகாஸ்**
**போன்: 8838623242, 9551855108**